# குழுநிலைப்படுத்தாமை (DE-STREAMING) குறித்துக் குடும்பங்கள் தெரிந்து கொள்ள விரும்புவன யாவை

## குழுநிலைப்படுத்தாமை

| | |
|---|---|
| **குழுநிலைப்படுத்தல் (streaming) என்றால் என்ன?** | • குழுநிலைப்படுத்தல் என்றால் மாணவர்களை வெவ்வேறு பாடத்திட்ட வகைகளின் அடிப்படையில் குழுக்களாகப் பிரித்தல் என்று பொருள்.<br>• ஒன்ராறியோவில், தற்போது கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு மற்றும் பிரெஞ்சு மொழி ஆகிய பாடங்களில் திறமை அடிப்படையில், மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகக் கல்வி (Academic), செயன்முறைக் கல்வி (Applied) மற்றும் உள்ளூரில் உருவாக்கப்படும் கற்கை நெறி (Locally Developed) ஆகியவையே இந்த 9 மற்றும் 10 ம் வகுப்புப் படிப்புகளுக்கான பாடநெறி வகைகளாகும்.. |
| **குழுநிலைப்படுத்தாமை என்றால் என்ன?** | • பல்கலைக்கழகக் கல்வி மற்றும் செயன்முறைக் கல்வி அடிப்படையில் மாணவர்கள் இனியும் குழுக்களாகப் பிரிக்கப்பட மாட்டார்கள் என்பதே குழுநிலைப்படுத்தாமை என்பதன் பொருளாகும்.<br>• உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கற்கை நெறிகளைப் பாடசாலைகள் தொடர்ந்தும் வழங்க முடியும்.<br>• 2021-2022 கல்வி ஆண்டில், கணித பாடமானது, திறனை அடிப்படையாகக் கொண்டு, குழுவாகப் பிரிக்கப்படப் போவதில்லை.<br>• குழுரீதியாகப் பிரிக்கப்படாத கணித வகுப்பானது பல்கலைக்கழகம், கல்லூரி, பயிற்சிக் கற்கை மற்றும் பணியிடப் பாதைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும். |
| **பாடநெறிகள் ஏன் இனிமேல் குழுரீதியாகப் பிரிக்கப்படப்-போவதில்லை?** | • குழுரீதியாகப் பிரிக்கப்படாத கற்கை முறையானது, மாணவர்களில் அதிலும் குறிப்பாக ஒதுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களில், சிறந்த விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்று ஆராய்ச்சி ஒன்று எடுத்துக் காட்டுகின்றது. |
| **9 ம் வகுப்புக்குரிய புதிய கணித பாடநெறிக்கான வகுப்பினது அளவு எவ்வளவாக இருக்கும்?** | • வகுப்பினது அளவு குறித்து முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. |
| **9 ம் வகுப்புக்குரிய புதிய கணித பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் பற்றிய தகவல்களை நான் எங்கே கண்டுகொள்ளலாம்?** | • புதிய கணித பாடத்திட்டத்தைப் பற்றிய மேலதிகத் தகவல்களைக் கல்வி அமைச்சின் பாடத்திட்ட இணையத்தளம் கொண்டிருக்கும்:<br>https://www.dcp.edu.gov.on.ca/en/curriculum#secondary |
| **குழுரீதியாகப் பிரிக்கப்படாத புதிய கணித பாடத்திட்டத்தில், சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு எவ்வகையான உதவிகள் வழங்கப்படும்?** | • சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கான தனிப்பட்ட கல்வித் திட்டத்தை ஆசிரியர்கள் செயற்படுத்துவார்கள்.<br>• இடைநிலைப் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காகக் கணிதபாட ஆசிரியர்கள், சிறப்புக் கல்வி வள ஆசிரியர்களுடன் தொடர்ந்து இணைந்து செயற்படுவார்கள். |
| **9 ம் வகுப்புக்குரிய அனைத்து பாடத்திட்டங்களும் அடுத்த ஆண்டில் குழு ரீதியாகப் பிரிக்கப்படப் போவதில்லையா?** | • 9 ம் வகுப்புக் கணிதபாடமே குழுரீதியாகப் பிரிக்கப்படாது போகும் முதலாவது பாடத்திட்டமாகும்.<br>• 9 ம் வகுப்பு ஆங்கிலம், பிரஞ்சு, புவியியல் மற்றும் விஞ்ஞானம் ஆகியன எதிர்கால ஆண்டுகளில் குழுரீதியாகப் பிரிக்கப்படாது விடப்படும். |
| **10 ம் வகுப்பும் கூட குழுரீதியாகப் பிரிக்கப்படாது விடப்படுமா?** | • அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள், 9 ம் வகுப்பைக் குழுரீதியாகப் பிரிக்காமல் விடுவதில் மட்டுமே, கல்வி அமைச்சகம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றது. |

## உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடநெறிகள்

| | |
|---|---|
| **உள்ளூரில் தயாரிக்கப்படும் (அல்லது அத்தியாவசியமான) பாடநெறிகள் யாவை?** | • 8 ம் வகுப்பில் கணிசமாக மாற்றியமைக்கப்பட்ட நிரலாக்கத்தைப் பெற்று வரும் மாணவர்களின் தேவைகளை உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்கள் ஆதரிக்கின்றன.<br>• சில பாடசாலைகளில் 9 மற்றும் 10 ம் வகுப்பளவில், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும்/அல்லது வரலாறு ஆகிய துறைகளில் உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.<br>• உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களில் உள்ள மாணவர்கள் அன்றாட வாழ்க்கையுடன் இணைக்கப்பட்ட விடயங்களைக் கற்றுக்கொள்கின்றனர்.<br>• உயர்நிலைப் பாடசாலைக் கணித பாடம் தேவைப்படும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு இந்த வகையில் உள்ள பாடத்திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |

| | |
|---|---|
| **உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடநெறிக்கு எனது பிள்ளை பரிந்துரைக்கப்படுவது ஏன்?** | உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டத்தை எடுக்கும்படி பரிந்துரைக்கப்படும் மாணவர்கள்:<br>• 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் கணிசமாக மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டங்களைக் கற்றுக் கொண்டிருக்கக்கூடும்..<br>• வகுப்பு மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் அளவு வேலையைச் செய்யாதவராக அத்துடன் மேலதிகமான உதவி தேவைப்படுபவராக இருக்கக்கூடும். |
| **உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டத்திற்கு எனது பிள்ளை பரிந்துரைக்கப்படுகின்றதா என்று அறிவதற்கு என்ன கேள்விகளை நான் கேட்க வேண்டும்?** | • எந்த வகுப்பு மட்டத்தில் எனது பிள்ளை மாற்றங்கள் இல்லாமல் சுயாதீனமாக வேலை செய்கின்றது?<br>• கணிதத்தில் எனது பிள்ளையின் திறமை நிலை என்ன?<br>• எனது பிள்ளை மாற்றங்களுடன் (வகுப்பு மட்ட எதிர்பார்ப்புகளில் செய்யப்பட்ட மாற்றங்கள்) அல்லது உதவிவசதிகளுடன் (நிச்சயமான எதிர்பார்ப்புகளை மாற்றாத உதவிகள்) கல்வி கற்கின்றதா? |
| **உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களை எடுத்தால் மாணவர்களுக்கு எவ்விதமான தெரிவுகள் (பயிற்சி, கல்லூரி, பல்கலைக்கழகம், பணியிடங்கள்) எதிர்காலத்தில் உள்ளன?** | • உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களை 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் முடிக்கும் மாணவர்கள் நேரடியாக 11 ஆம் வகுப்புப் பணியிடப் படிப்புகளுக்குச் செல்லத் தயாராகி வருகின்றனர், இது உயர்நிலைப் பாடசாலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு மற்றும்/அல்லது பயிற்சி வாய்ப்புகளுக்கு வழிவகுக்கின்றது.<br>• உள்ளூரில் தயாரிக்கப்படும் பாடத்திட்டங்களை 9 ஆம் வகுப்பில் வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்கள், அதே 9 ஆம் வகுப்புப் பாடத்தை குழுரீதியாகப் பிரிக்கப்படாத பாடங்கள் போன்ற வேறு பாட வகைகளில் எடுக்கலாம். இந்தப் பாதை பின்னர் கல்லூரி, பயிற்சி அல்லது பல்கலைக்கழகப் படிப்புகள் மற்றும் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளின் பாடத்திட்டங்களுக்கு வழிவகுக்கும். |

## மேலதிகத் தகவல்கள்

| | |
|---|---|
| **எனது பிள்ளை பிரஞ்சு, ஆங்கிலம், விஞ்ஞானம் அல்லது புவியியலுக்கான செயன்முறைக் கல்வியைத் தேர்வுசெய்தால், இது பிற்கால வகுப்புகளில் அவர்களின் பாதைத் தெரிவுகளை எவ்வாறு பாதிக்கும்?** | • 11/12 ஆம் வகுப்புப் பயன்பாட்டுக் கல்விப் பாடங்கள், கல்லூரி மற்றும் பணியிடப் படிப்புகளுக்கு நேரடியாக வழிநடத்துகின்றன, ஆனால், பெரும்பாலும் மேலதிகமான பாடங்களை எடுப்பதன் மூலம். பல்கலைக்கழகத்திற்கும் அவை வழிவகுக்கும்<br>• அனைத்துத் தெரிவுப்பாதைகளும் மாணவர்களுக்குக் கிடைக்கும்போது, பயன்பாட்டுக் கல்விப் பாடங்களில் தொடங்கும் மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்விப் படிப்புகளில் உள்ள மாணவர்களை விட இரண்டாம்-நிலைக்குப் பின்னரான கல்வியைத் தொடர்வது குறைவு என்பதைத் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன என்பதனை அறிந்து கொள்வது அவசியம். |
| **பல்கலைக்கழகக் கல்வி மற்றும் பயன்பாட்டுக் கல்விகளுக்கு இடையேயுள்ள வித்தியாசம் என்ன?** | • பயன்பாட்டுக் கல்வி வகுப்புகளில் உள்ள உள்ளடக்கம் பழக்கமான சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கற்பிக்கப்படுகின்றது.<br>• பல்கலைக்கழகக் கல்வி வகுப்புகளில் உள்ள உள்ளடக்கம் பழக்கமான மற்றும் புலனாகாத சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கற்பிக்கப்படுகின்றது.<br>• தற்போது, பயன்பாட்டுக் கல்வி வகுப்புகள் 22 மாணவர்களையும், பல்கலைக்கழகக் கல்வி வகுப்புகள் 29 மாணவர்களையும் கொண்டிருக்கலாம். |
| **எனது பிள்ளை கணிதத்தில் எவ்வாறு உதவி பெற முடியும்?** | மாணவர்கள் பின்வருவனவற்றிலிருந்து உதவி பெறலாம்:<br>• அவர்களின் கணித ஆசிரியர்; மற்றும்/அல்லது<br>• TVO Mathify மூலம் இலவச இணையத்தளப் பயிற்சி; மற்றும்/அல்லது<br>• இந்த சபையின் இணையத்தளத்தில் உள்ள கணித பாடப் பக்கத்தில் உள்ள சுய மதிப்பீட்டுக் கருவி மூலம் |
| **குழுநிலைப்படுத்தாமை குறித்த ஆராய்ச்சி பற்றிய மேலதிகமான தகவல்களை நான் எங்கே அறிந்து கொள்ள முடியும்?** | குழுநிலைப்படுத்தல் பற்றிய கூடுதல் தகவல்களை பின்வரும் இணையத்தளங்களில் காணலாம்:<br>• Restacking the Deck<br>• Is It Time to Detrack Math?<br>• Restructured Pathways - Addressing Streaming from Grades 1 to 12 in the Toronto District School Board<br>• NCSM Position Paper - Closing the Opportunity Gap: A Call for Detracking Mathematics<br>• Ten Steps to Equity in Education<br>• Equity and Quality in Education: Supporting Disadvantaged Students and Schools<br>• Stop Streaming Students<br>• Understanding Issues Associated with Tracking Students in Mathematics Education |